
14477

உ

அமரர்
வடிவேல் முருகன் தியாகராசா
அவர்களின்

நினைவு மலர்



# IN MEMORIAM

# VADIVEL MURUGAN THIAGARAJAH


06-07-1995

## மஹா ம்ருத்யுஞ்ஜய மந்திரம்

ஓம் த்ர்யம்பகம் யஜாமஹே
ஸுகந்திம் புஷ்டிவர்தனம் /
உர்வாருகமிவ பந்தனாத்
ம்ருத்யோர்முக்ஷீய மாம்ருதாத் //

## காயத்ரி மந்திரம்

ஓம் பூர்புவஸ்ஸுவ: /
தத் ஸவிதுர்வரேண்யம்
பர்க்கோ தேவஸ்ய தீமஹி /
தியோ யோ ந: ப்ரசோதயாத் //



அமரர் வடிவேல் முருகன் தியாகராசா அவர்கள்

தோற்றம்
05-02-1931

மறைவு
06-06-1995

# அமரர் திரு. வடிவேல் முருகன் தியாகராஜா அவர்கள் மீதுபாடிய இரங்கற்பா.

சீரிலங்கைத் தீவினுக்குச்
சிறப்பூட்டும் பதிகளிலே
வட்டூர்ப் பதியதன்
வனப்பூட்டும் அங்கமென
நின்று நிலைக்கும்
நிலப்பரப்பு அதுவாகும்

சித்தமழகியார் செப்பு புகழ்
வாழ்த்தொலிக்க
நெல்லும் நீரும் நெடுங்காலம்
வளம் சேர்க்கும்
சித்தன்கேணியது
திரு நிறைந்த செம்மையினால்

சித்துக்கு வித்தான
சித்தர் தவமியற்றிச்
செழுமை கண்ட காரணத்தால்
நித்தம் அதன் வளங்கள்
நேர் நின்று செகம் புரக்கும்
சொத்தாக அதன் குடிகள்
சோர் விலாப் புகழ் சேர்ப்பர்

அத்தகைய நற்பதியில்
மானா முதலியவன்
வழியுந்த பெருங்கொடியில்
தானத்தால் புகழ் பூத்த
தனவானாம் வைத்திலிங்கம்
தேனாட்டிற் கால் பதித்துத்
தேடரிய செல்வம் ஈட்டி
கானகங்கள் கழனியாகக்
கடுமுழைப்பால் களம் கண்டு

நாவாய்கள் பல ஒட்டி
நாற்றிக்கும் பாய் விரித்து
கோயிற் திருப்பணிகள்
கோலமிட
பொருள் வழங்கி வாழ
வகையறியா

வளமற்ற வனிதையர்கள்
நன்றிப் பெருக்கோடு
தந்துணைவர் கரம் பற்றி
வாழ்த்தி நிற்க
பேரும் புகழும் நிறுவிய
அவ்வூரின் தகைசால்
சான்றோர்க்கு
மைந்தனாய் அவதரித்த
மார்க்கண்டுப் பேராளன்
தந்தை தன் பெருமை

தானே தலைக் கொண்டு
மட்டுநல்நகரில் கல்விப் பயிர்
வளர்க்க
தாபித்த பள்ளித் தலமனைத்தும்
முழுதாகப் புகழ் பாட
நாட்டார் பாடலிலும்
நாயகனாய் தாம் மிளிர்ந்து
கூட்டி வைத்த நற்பெயரைக்

காக்க வந்துதித்த
தியாகத்தின் தனி உருவாம்
தியாகரா்ஜப் பெயர் பூண்டோன்
தந்தை வழியில் தாத்தா பெயர்
துலங்கத்
திக்கெல்லாம் பெருவணிகம்
சிற்பப்பாக ஆற்றி-நின்றோன்
அந்நாளில் வட்டூரில் புகழ்
பூத்த
நொத் தாரிசு சிதம்பர
நாதப்பிள்ளை கைப்பிடித்த
கொடை வள்ளல்
வைத்திலிங்கத்தார்
மூத்த மகள் இராசம்மா
பெற்றெடுத்த
லக்குமி அம்மாவை
மணமுடித்து இப்புவிக்கு
ஈந்த செல்வம் இரண்டாகும்

அந்நாளில் அன்ன லக்குமியை
அக்காவாய் முன்னிறுத்தி
ஆயிரத்துத் தொள்ளாயிரத்து
முப்பத் தோராம் ஆண்டதனில்
பெப்ரவரித் திங்கள் ஐந்தாம்
தேதி சரியாக வந்துதித்தார்
தியாக ர்ராஜப் பெயர்
தொடர்ந்து
வடிவேல் .முருகனவன்
பெண் பிள்ளையத தொடர்ந்து
பிறந்துதித்த ஆண்குஞ்சு

பொன்னும் மணியும்
புதுப் பொலிவாய் ஒளி கால
மாம்ன்மார் வாழ்த்துரைக்க
நாளும் பொழுதும் நலங்கள்
நனி சேர
குறு குறு நடந்து

சிறுகை நீட்டி
மயக்குறு விழிகளால்

புது நகை காட்டி
பெற்றோர் உற்றோர்
உவகையில் திளைக்க
ஆரம்பக்கல்வியை
ஆசிரியர்களிக்க
மட்டு நகர் மெதடிஸ்த
மத்திய கல்லூரியில்
மகிழ்வுடன் பெற்று
நண்பர் புடைசூழ
இடை நிலைக் கல்வியை
கொழும்பு புனித
தோமஸ் கல்லூரியில்
தடைகள் அகற்றித்
தருக் கொடு கற்று
ஆசிரியர் தம்மின்
அன்பினைப் பெற்று
ஆங்கிலம் தமிழென
அறிவுசால் நூல்கள்
அனைத்திலும் மூழ்கி கணிதத்
துறையினில்
கவனம் செலுத்தி
முன்னணி மாணவனாய்
முழுமைகள் கண்டு
பட்டப் படிப்பினைப்
பல பேர் வியக்க
சென்னை நகரில்
செருக் கறப்பெற்று
தாயகம் திரும்பிக்
கணக்காளராய்ப் பயின்று
பட்டயக் கணக்காளர்
பதவியும் பெற்று
சான்றோனாகி
தனக் கொரு துணையாய்ப்
பேரன் வழியில்

பேத்தியான
இரத்தினேஸ்வரியின்
திருக் கரம் பற்றி
இனிய நல் இல்லறம்
இதமாய் .நடத்தி
கிருபாகர் னொடு
சுரேந்திரன் அருச்சுனன்
திரு நிறை புத்ல்வரைக்
குலந் தழைக்கப் பெற்று
ஒன்றே ஒன்று
கண்ணே கண்ணென
மீனக் குமரியை
ஆசைக் கினியளாய்
அறங் காக்கப் பெற்று
ஆண்கள் மூவரொடு
அழகிய பெண்ணெருத்தி
அவதரித்த பூரிப்பில்
அருங் கல்வி அவர்களுக்கு
அளிப்பதில் அக்கறை
அளவின்றிக்காட்டி
தந்த்தை மகன் காற்றும்
நன்றி இதுவென
சான்றோன் மூத்தோனை
பணிப்புரை வழங்கும்
இயக்குனனாக
யுனி வாக்கேர்ஸில்
தொழில் புரிய வைத்து
மற்றவர் இருவரை
முது ம்மாணிகளாக்கி
அமெரிக்கா சென்று
பணிபுரிய வைத்து
ஒரே ஒரு பெண்ணை
பல கலை பயிற்றி
கணனித் துறையில்
மேலாளாக
மேன்மை கொளச்செய்து
உரிய இடமதில்

உயர் கல்வி காட்டி
கிருபாகரனை பவானிக்கும்
சுரேந்திரப் பேரோனை
இன்னோர் பவானிக்கும்
அர்சசுனன் இளையோனை
மைதிலிப் பாவைக்கும்
பாகங்களாக்கி
பரிசுத்த மணத்தில்
பரிமளம் ஏற்றி
திவ்யா குமரன்
திரு நிறை பிரணவன்
பேரை உடைய
பேரர்களில் உவந்து
ஆயிரங் காலத்துப்
பயிரவையாக
இல்லறத்தின் இனிமையிலே
இவையென்றால்
தமிழுக்கும் சைவத்துக்கும்
சமூக நலச் சேவைக்கும்
பணியாற்றிப பங்கு கொண்ட
பாங்குகள் யார் மறப்பார்
தலைநகர் தனிலே
தருக் கொடு விளங்கும்
தமிழ்ச் சங்கத் தலைமை
வைத்திலிங்கம்
அறக் கட்டளைத் தவிசு
இன்னோரன்ன
தர்மம் சால் நிதியங்கள்
பொறுப்புடை பதவி
சங்குவேலி ஐங்கரன்
கோயில் பரிபாலன
சங்கல்பம் எள்று பல
சீரிய பணிகளில்
சலிப்பிலா அவாவுடன
மேலும் மேலும்
சேவைகளாற்றும்
திராணியும் பெற்று

சிதிலமில்லாச்
சிந்தனையாளனாய்
தக்கோர் நாவில்
நாளும் உறைந்து
உடம்பால் விடுதலை
உலகினில் பெற்றான்
ஆன்மா அழிவிலா
சொர்க்கமுறட்டும்
ஜயன் திருப்பதம் என்றும்
அடைக்கலம் ஆக.


**RAMAKRISHNA MISSION**
(Ceylon Branch)
40, Ramakrishna Road,
Wellawatta,
COLOMBO - 6.

PHONE { ASHRAMA: 588253
CULTURAL CENTRE:


21.6.95

வாழ்த்து மலர்

பிறப்பு, இறப்பு என்பவை இயற்கையின் நியதிகளாகும். அவற்றை யாரும் மாற்ற இயலாது. இருப் அவ்விரண்டிற்கும் இடைப்பட்ட காலமாகிய வாழ்க்கையை விரும்பிய வண்ணம் அமைத்துக்கொள்ளும் சுதந்திரம் மட்டும் நமக்கு அளிக்கப்படுகிறது. அந்த சுதந்திரத்தை பயனுள்ள முறையில் பயன்படுத்தி வாழ்க்கையை வளமுள்ளதாக அமைத்துக் கொள்பவர் உண்மையில் அனைவரது பாராட்டிற்கும் உரியவர். அத்தகைய ஒரு மேன்மையான வாழ்க்கையை வாழ்ந்து மறைந்தவரே அமரர் ஸ்ரீ V.M. தியாகராஜா அவர்கள். எளிமை, அமைதி, அடக்கம், அன்பு, பொறுமை — இவை அவரிடம் இயற்கையாகக் காணப்பட்ட குணங்களாகும். அனைவரது நன்மதிப்பையும் பெற்று நிறைவான வாழ்க்கையை வாழ்ந்தவர் அவர். நமது மிஷனுடன் பல ஆண்டுகள் நெருங்கிய தொடர்பு கொண்டு பல சேவைகள் ஆற்றியுள்ளார் அவர். பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரது அருளினால் அவரது ஆன்மா இறைவனது திருவடிகளையடைந்து அமைதி பெற மனமாரப் பிரார்த்திக்கிறோம்.

அவரது குடும்பத்தினர் அனைவருக்கும் இறைவனது ஆசிகளை வேண்டிப் பிரார்த்திக்கிறோம்.

சுவாமி ஆத்மகனாநந்தா

# V.M. THIAGARAJAH - THE FAMILY

VADIVEL MURUGAN THIAGARAJAH is the scion of a distinguished family that exercised great influence in the religious social and economic spheres in the North and East for well over a century. His ancestry could be traced to Mana Mudaliyar of renown. Coming down the line his progeny is as follows:-

MANA MUDALIYAR
ILLAYAR
KATHIRGAMAR
PERIYA THAMBY
KASINATHAR
VAITHILINGAM
MARKANDAN
THIAGARAJAH
VADIVEL MURUGAN

## VAITHILINGAM

The family hails from SITHANKERNY, VADDUKODDAI and later made SANGUVELY, MANIPAY and Batticaloa their second homes. In recent times it was VADIVEL'S great grand father MATTAKALAPPU VYTHILINGAM who brought the family into limelight. Having come to Batticaloa to trade in arecanuts as a boy of sixteen, he expanded his business in all directions and very soon built for himself a business empire there. He was the pioneer who opened coconut plantations and brought vast acres of land under paddy cultivation in the present Batticaloa and Ampara Districts. Those were days when travelling facilities were limited. He acquired a fleet of schooners which provided transport not only from Batticaloa to Jaffna but also touched on all important ports in the Island. Later the service was extended to some ports in India and Burma. While Asaipillai ran the coach service Vaithilingam provided the schooner service during the last decades of the 19th C and early decades of the 20th C. These schooners were manned by sailors from Valvettithurai and the 'THANDALES' - the captains were all Valvettithurai men. So much so Valvettithurai people consider Vaithilingam their man. And in recent articles there were mix-ups as there was a great Vaithilingampillai at Valvettithurai also during this time. It is recorded that Vaithiliugam bequeathed 16 schooners and 21 elephants to his son Mudaliyar Markandan. It could be said that Vaithilingam contributed in a great way to the economic development of Batticaloa District.

But it is as a philanthrophist he has found a place in history. His philanthrophic acts were a legion and there was no worthy cause in Jaffna or Batticaloa that has not received a helping hand from Vaithilingam during his time. He encouraged the founding of Hindu Schools in Jaffna and later in Batticaloa. Among his contributions to schools two deserve mention - Rs 1000/= to Jaffna Hindu and Rs. 2000/= t0 Manipay Hindu, big sums those days. He was the first to set up a school to train Brahmin priests at Uduvil

He set up 'Madams' at Kataragama, Keerimalai, Uhanai and Thiruchenthur and provided free meals during Festivals. These Madams were massive structures and the Keerimalai Madam was also used as a conference hall those days. It should be noted that big conferences in Jaffna like the Annual Sessions of the Youth congress where political leaders from India and South Ceylon participated were held at the Vythilingam madam at Keerimalai. The madam still stands proclaiming his glory. People who visit Kataragama during festival days then, could not have missed the delicious meals that were served at his Kataragama Madam.

He also built temples and made endowments to existing ones. He built the main structures of the Sithankerny Pillaiyar Temple Sithankerny Sivan Temple and Vaddukoddai Thuraddipanai Amman Temple, Vasantha Mandapam at Valvettithurai Sivan Temple, Navatkiraha Mandapam at Keerimalai Naguleswara Temple and made rich endowments to the Vallipura Temple. Sanguvely pillaiyar Temple was all his own. There are other temples for which he supplied Timber etc. There was a famine in Jaffna District in the 1890s and he helped the Government agent

agent in the Relief work by bringing shiploads of rice from Batticaloa and Burma and distributing that free. Mr. TWYNAM the then Government agent has thanked him for this in one of the government publications.

## MUDALIYAR MARKANDAN

Vaithilingams' son Markandan was associated with his father in all his business activities even as a young man. He too proved himself to be a very successful businessman. He branched off in new directions such as timber business and taking contracts including Arrack rentals even in distant districts in the South such as Moratuwa. He also tried his hand in investing in plumbago mines.

He continued the philanthrophic activities of his father. Such was his large-heartedness the people in the distant villages of Batticoaloa have given him a place in the Nattu Padal - the folk songs of Batticaloa.

His greatest service to the people of Batticaloa was in the field of Education. He set up a series of Schools, managed them for long periods and later handed them over to the Ramakrishna Mission. He can easily be considered the pioneer Hindu Educationist of Batticaloa District.

A list of the schools he set up is not available but from the acknowledgments made from time to time, we come to know them. I can remember Professor P. Chandrasegaram, Head of the Dept, of Education University of Jaffna, while delivering the founder memorial lecture at Victoria College in 1987 told us how Mudaliyar Markandan helped his father Pathakuddy Upathiyayar from Muthur to become a teacher, posted him to Markandan's Karativu school and later transferred him to his Mandur School as Head Master. He met a teacher there and got married to her, and that was Chandrasegaram's mother. Prof. Chandrasegaram paid a high tribute to Mudaliyar Markandan's services to education in Batticaloa District. He was to write a book on this but unfortunately he died soon after. The building of Anaipanthy Hindu Girls' College and the Vipulananda Hall at Kalladi Uppodai were his. These have been acknowledged.

He was conferred the title of Mudaliyar - a prestigious title then - for all the services he did. As he was considered a person of great eminence public receptions were organised all over Batticaloa District. Thousands gathered at the receptions at Pottuvil and Kalmunai by the grateful Muslim Public and it is said such big receptions have not been surpassed to this day.

## K.V.M. THIAGARAJAH

Mudaliyar Markandans' son and father of Vadivel Murugan was K.V.M. Thiagarajah who continued the family traditions. It was during his time that a calamity fell on the family when one Vander poorten claimed all their properties because of a mortgage by Mudaliyar Markandan. It was left to Thiagarajah (Senior) to fight a long drawn out case and redeem half the properties from Vander poorten.

Thiagarajah married Leckumy Ammah daughter of Notary Sithamparanathapillai, a leading practitioner as a Notary, a Tamil scholar and a great educationist who managed seven schools including Vaddukoddai Hindu College. He and his brother in law Mudaliyar Markandan were members of the first executive Committee of the Hindu Board of Education of which Sir Ponnampalam Ramanathan was President and Sir Waithilingam Duraiswany was secretary.

Notary Sithamparanathapillai married Rasammah the eldest daughter, of Mattakalappu Vythilingam. The wedding of Thiagarajah (Senior) and Leckumy Ammah is supposed to be the grandest wedding held in Jaffna in this century. It was held in 1923 and they had spent more than one lakh of rupees then. A decorated chariot drawn by elephants accompanied by the best of Natheswara musicians was a great attraction to the people of Jaffna at that time Thiagarajah (Senior) continued to do the work of the family but died young. His brothers K.V.M. Somasundram,

K.V.M. Subramaniam and K.V.M. Manickavasagar, all of them men of distinction, however lived up to the family ideals.

## VADIVEL MURUGAN THIAGARAJAH

Thiagarajahs' son was Vadivel Murugan. He went by the name of V.M. Thiagarajah. He had his early education at Batticaloa Methodist Central College and secondary Education at St. Thomas College, Mt. Lavinia. He was also for a time at Jaffna College Vaddukoddai. He went to Loyla College, Madras for his University Education, and secured his B. Commerce degree. After obtaining his degree he joined the firm of Turquand and Young for his training in Accountancy and passed out as an Accountant. He continued to work there from 1960 to 1965 and then went on to Samuel & Sons as Chief Accountant. He also served as Director there. Then he worked at Baihra Farms as Chief Accountant and was there from 1980 to 1994. Wherever he worked he devoted himself fully to his work and won the praise of his superiors. They all appreciated his diligence, sense of dedication and commitment to work. They knew that he was reliable and any assignment given to him was done thoroughly and completely. Even in sickness he did not forsake his responsibilities.

Those who worked under him looked up to him for guidance. They loved him because of his simplicity, Kindness, generosity and his never failing advice.

Being a member of an illustrious family he was called upon to attend to many Social duties. Besides attending social functions he was guide and philosopher to his many relations. He helped them in manifold ways.

Whatever work he undertook he gave his best to it. Only two years back the mantle of the arduous duties of the Chairman of the Vythilingam trust devolved on him.

He was Treasurer and later President of the Colombo Tamil Sangam a prestigious Association. As president of this Sangam he had an opportunity to serve the Tamil public at large. He took many an innovative step for its advancement including starting a building programme. The new office and building of the Sangam were mainly his efforts.

As trustee of the Sanguvely Pillaiyar Temple he had direct control over its management. He was a life member of the Ramakrishna Mission and was responsible in introducing his daughter Meenakumari in its service.

All this he did silently without much ado that even close friends did not know that he was involved in so many service activities.

His attachment to his family was extraordinary. He was a tower of strength to his three sons, his only daughter and his devoted wife Ratneswary.

He lived as he should –'*வாழ்வாங்கு வாழ்ந்து*' and he now enjoys eternal happiness with his creator

**May his soul rest in peace**

**K.Arunasalam**

# தமிழ்ச் சங்கத்தின் பேரிழப்பு.

இலக்கியச் செம்மல், செ. குணரெத்தினம்
தலைவர், கொழும்பு தமிழ்ச் சங்கம்

வீ. எம். தியாகராசா என்ற மாமனிதன் இறைவனடி சேர்ந்து விட்டார், என்ற செய்திகேட்டு மிகுந்த துக்கத்தைச் சுமந்து கொண்டிருக்கிறோம். கொழும்புத் தமிழ்ச் சங்கம் தமிழ்ச் சான்றோர் பலரால் ஆரம்பிக்கப்பட்டு பொன்விழாவும், கண்ட பெருமைக்குரியது. இதை எவ்வெண்ணங்களுடன் சான்றோர் தொடக்கி வைத்தார்களோ அவ்எண்ணங்கள் ஈடேற நாளும் உழைத்து நிற்கும் தாபனமிது. தியாகராசா போன்ற சான்றோரின் கடும் உழைப்பே இதன் பின்னணி என்றால் மிகையல்ல. அமைதியே உருவெடுத்த தோற்றம், கண்ணியம், நேர்மை. நிதானம் உள்ளத் தெளிவு, இவற்றின் ஒரு சேர்ந்த படிமமே தியாகராசா அவர்கள். தமிழ்ச் சங்கத்தைப் பொன்னே போல் போற்றியவர்கள். 1970 தொடக்கம், நீண்ட காலமாக ஆட்சிக் குழு உறுப்பினராகவும், பின்னர் பொருளாளராகவும், பின்னர் துணைத் தலைவராகவும், 1987 தொடங்கி 1989 வரை சங்கத் தலைவராகவும் பொறுப்புகள் பல வகித்தார்.

தமிழ வேள் கந்தசாமி, சங்கப் பொதுச் செயலாளர் அடிக்கடி குறிப்பிடுவது போல் தியாகராசாவை நினைத்தால் சங்கத்தின் மாடிக் கட்டிடம் மனதில் தோற்றம் தரும் என்பார்கள். தியாகராசா அவர்களின் கடும் உழைப்பின் பயனாக எழுந்து நிற்கும் மாடிக்கட்டிடம் அவரை எங்களுக்கு என்றும் நினைவு கூர வைக்கும்,

புதிதாக உள்ள கட்டிடத்துக்குக் கால்கோள் கொண்ட போதும் அவர் இருந்து வழிநடத்தினார். முன்னைய சங்கத்தின் தற்போதைய தலைவர் என்ற முறையில் அவரின் மறைவு எனக்குத் தனிப்பட்ட பேரிழப்பாகும். பிரச்சனைகள் எழும் போதெல்லாம் அவரின் வழிகாட்டலை நான் வேண்டி நிற்பேன். அவரது உறுதியும், பாரபட்சமற்ற தெளிவும் கண்டு வியப்பேன். கட்டிடக் குழுவின் தலைவர் என்ற முறையில் கடினமான பொறுப்பைச் சுமந்து கடமைகளைச் செவ்வனே செய்தார். அவர் போற்றிய முன் கட்டிட அமைப்புக்கும், தற் போதைய கட்டிட அமைப்பிற்கும் அவரே கட்டிடக்குழு தலைவராகப் பணியாற்றினார். நேர்மை எங்களுக்குப் பலமாக அமைந்தது.

வீ. எம். தியாகராசா அவர்கள் ஒரு முழுமையான வாழ்வு கண்ட பெருந்தகை. கல்விமேம்பாடு, சொல்வளம், உத்தியோகப் பிரபலம், இவை ஒரு சேர அமைவது கடினம். திரு. தியாகராசாவிடம் இவை அமைந்த தோடு, சிறந்த இல்லறத்தான் ஒருவனுக்கு அமைய வேண்டிய மனையறம் கைவந்த மனைவியும் சற்புத்திரர்களும், புத்திரியும் அமைந்தது தெய்வசங்கற்பம்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த நல் மனிதத் தன்மைகள் ஒரு சேரப் பெற்ற, நல்லறம் போற்றி வாழ்ந்த மாமனிதன் வீ. எம். தியாகராசா அவர்கள்.

"செய்வன திருந்தச் செய்தே
சிறப்புகள் பலவும் கண்டாய்,
ஐயஉன் போக்கை எண்ணின்
அவைவர்க்கும் கண்ணீர் வாரும்,
வையத்துள் கொழும்புச் சங்கம்
வாழுநாள் அந்நாள் மட்டும்,
தெய்வமே அனையாய் உன்தன்
திருப் பெயர் சேர்ந்தே வாழும்."

# A CLOSE FRIEND

Tuesday 6th June 1995 will be a memorable day in the lives of many people, as in mine, for on that day Vadivel Murugan Thiagarajah was called away from this mortal life.

Thiag and I were very close friends for nearly fifty years. We have shared together many moments of smiles, laughter joy disappointments and sadness. Since we met together and lived in the same Boarding house, when he was an Accountancy student we have maintained close link throughout our working life, until the final moments of his earthly existence. This was so, because he was always a friend in need. Our friendship was mutual and deep. He was a modest man who did not throw about his weight unduly. Conversations and fellowship with him were pleasant, and enriching. He was a man with a good sense of humour. In his working life he was very painstaking, understanding with a deep sense of responsibility. He was a self-less man,

We both joined the Colombo Tamil Sangam at its inception as members of the Executive Committee. He held the office of Treasurer and later President. Here too his unassuming nature and sincerity of purpose were of immense value in conducting and promoting the affairs of the Sangam. He was a truly public spirited man, who treated everyone with respect, irrespective of his community, class or religion.

We used to attend together, very many lectures at the Ramakrishna Hall. He was a man with a heart for religion and philosophy. He did not do these merely to enlarge his horizon of knowledge, but as a seeker after Truth. As head of his family he was deeply devoted to attending to the family's material and spiritual needs. His sons were all class mates & School mates of my sons at St. Thomas' College, Mt. Lavinia. As in the case of the parents the interplay of spiritual and cultural values on each other was a great blessing in their growing to be respected and successful men in society. Thiag was a model husband and father. His integrity was beyond question at all times. Alas his qualities are rare in the contemporary society. Hence he will be missed sadly by all who moved in his company, for he was a noble soul.

His untimely death leaves a big void in the lives of his wife, children and relations. They are sure to pine for his help and guidance in the days to come. It is our fervent hope and prayer that God will endow them with guidance and courage in their hours of need. May God's abundant grace be with the soul of V.M. Thiagarajah.

**Eby Isaac**

## திரு .கா.வ.மா.தி. வடிவேல்முருகன் இயற்கை எய்தினர்

மனிதவாழ்வின் முக்கிய நோக்கம் ஆத்மா முத்தி பெறுதலா கும்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

வடிவேல் முருகன் அவர்கள் சிறுபராயத்தில் தந்தையை இழந்து சிறியதந்தையாரால் வளர்க்கப் பெற்று குடும்பத்தில் தந்தையாரைப் போலவே பொறுமை,பெருந்தன்மை ஆகிய சிறப்பியல்புடன் விளங்கினர். கர்.வ.குடும்பத்தோர் தியாகராஜா என்றே மதித்து நடந்தனர். தமது கடமையை சரிவரச் செய்து எல்லோருடைய அன்பையும் கவர்ந்தார். ஸ்ரீசிவஞானப் பிள்ளையார் ஆலயபரிபாலனத்தை திறம்பட நடாத்தி வந்தார். நாம் அவரின் அன்பிலும் ஆதரவிலும் கவலை இல்லாது இருந்தோம்

"அவர் நின்று பயனுதவி நில்லா அரம்பையின்
கீழ்கன்றும் உதவும் கனி"

என்றபாடலின்படி தமது முன்னோர் செய்த தொண்டினை தாமும் செய்து வாழ்ந்தார். அவர் மறைவால் நானும் எமது குடும்பத்தா ரும் மிக்கவருந்து கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய சிவஞானப்பிள்ளையார் பாதம் பணிவோமாக. துயருறும் அவர் மனைவி, மக்கள், சகோதரி, சுற்றத்தார் ஆகியோர்கு ஆறுதல் கூறுகின் றோம்.

வா.பால சுப்பிரமணியக்கு ருக்கள்
சிவஞானப்பிள்ளையார் ஆலயம்
சங்குவேலி.

## பாசஒளிவிளக்கு

"தோன்றிற்புகழேழாடு தோன்றுக அஃதிலாற் தோன்றலிற்
தோன்றாமை நன்று"

என்ற தெய்வப் புலவரின் குறளுக்கு இணங்க யாழ்ப்பாணத்தில் உள்ள சங்குவேலியில் தியாகராஜா தம்பதியினருக்கு 5-2-1931 அன்று திருவடிவேல் முருகன் பிறந்தார். அன்பானவர். பண்பானவர். பிறப்பினுல் ஒரு செல்வந்தராக இருந்தும் அமைதியான வாழ்கை வாழ்ந்தார் "மனதிலுறுதி வேண்டும், வாக்கினிலே இனிமை வேண்டும் நினைவில் நல்லது வேண்டும்" என்று பாடிய பாரதியாரின் கவிதைக்கு அமைய உறுதி, இன்சொல் பேசுதல், நல்லதை நினைத்தல் என்பனவற்றை தம்மகத்தை கொண்டவர். தெய்வீக சிந்தனை உள்ளவர். தூய்மை, உண்மை, நேர்மை, எளிமை, தாராளமனப்பான்மை, தன்னலமற்றசேவை என்பன இவரின் குணஇயல்புகளாகும். இதனுலன்றோ தான்கடமை ஆற்றிய நிறுவனங்களிலுள்ள அனைவரினதும் அன்பையும் நன்மதிப்பையும் பெற்றார்.

இலங்கையில் மட்டுமன்றி கடல் கடந்தநாடுகளில் இருந்து வரும் உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவர்க்கும் அவர்கள் வேண்டிய உதவிகளை மனநிறைவுடன் அன்புடன் செய்து வந்தமையாலன்றோ இன்று எல்லோரும் ஒரு அன்பான தம்பியை, அண்ணனை, மாமாவை, பெரிஜயாவை, நண்பனை இழந்து கதிகலங்கின்றனர்

"தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து முந்தி இருப்பச் செயல்"

என்ற வள்ளுவரின் குறளுக்கு இணங்க தமது நான்குசெல்வங்களும் பட்டம் பெற்று தொழில்புரிவதைக் கண்டு பூரிப்படைந்தார். தானதருமங்களிலும், விருந்தோம்பலிலும் சிறந்து விளங்கிய இத்தம்பதியினர் பல உறவினர்களுக்கு தாமே முன்னின்று திருமணங்களை நடத்தியது மட்டுமன்றி, கன்னிகாதானம் செய்தும், கன்னிகாதானத்தை ஏற்றும்பலர் நல்வாழ்வு வாழவழி வகுத்தமையால் அன்னாரின் திடீர்மரணச் செய்தி அறிந்து அனைவரும் பேரதிர்ச்சியுற்றனர்.

அன்பின் உறைவிடமே! பாசஒளிவிளக்கே! எல்லோர்க்கும் உயர்வான வாழ்க்கையை அளித்து விட்டு நீங்கள் எங்களை விட்டுச் சென்றுவிட்டீர்கள். எங்கள் துயரம் ஆறாது. நாங்கள் தரணியில் உள்ள மட்டும் நீங்காது உங்கள் நினைவு. சிறகிழந்த பறவைகளானோம். துடுக்கு இழந்த படகுகளானோம்.

"சிவசிவ என்றிட சிவகதிதானே" என்பதற்கு இணங்க தில்லைக் கூத்தனின் திருவடியை அடைந்துவிட்டீர்கள். எங்கும் நிறைந்திட்ட பரம்பொருளாம் சங்குவேலி ஸ்ரீசிவஞானப் பிள்ளையார் ஆத்மா சாந்தியடைய அருள்புரிவாராக என பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி ! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!**

அன்புள்ள,
பெறா மகள்,
கௌரி. ரட்ணவேல்.

**உ**

**சிவமயம்**

**திருச்சிற்றம்பலம்**

கஜானனம் பூதகணாதி ஸேவிதம்
கபித்தஜம்பூ பலஸார பக்ஷிதம் /
உமாஸுதம் சோகவினாச காரணம்
நமாமி விக்நேச்வர பாத பங்கஜம் //

## பிரணாம மந்திரங்கள்

குருர்ப்ரம்ஹா குருர் விஷ்ணு:
குருர் தேவோ மஹேஸ்வர:
குரு: சாஷாத் பரப்ரம்ஹ
தஸ்மை ஸ்ரீ குரவே நம :

ஓம் ஸ்தாபகாய ச தர்மஸ்ய
ஸர்வதர்ம-ஸ்வருபிணே /
அவதாரவரிஷ்டாய
ராமகிருஷ்ணாய தே நம: /

ஜனனீம் ஸாரதாம் தேவீம்
ராமக்ருஷ்ணம் ஜகத்குரும் /
பாதபத்மே தயோ: ச்ரித்வா
ப்ரணமாமி முஹுர் முஹு: //

நம: ஸ்ரீயதிராஜாய
விவேகானந்த ஸூரயே /
ஸத் சித் சுக ஸ்வருபாய
ஸ்வாமினே தாபஹாரிணே //

## தேவாரம்

உற்றுமை சேர்வது மெய்யினையே
உணர்வது நின்னருள் மெய்யினையே
கற்றவர் காய்வது காமனையே
கனல்விழி காய்வது காமனையே
அற்றம் மறைப்பதும் உன்பணியே
அமரர்கள் செய்வதும் உன்பணியே
பெற்றும் உகந்தது கந்தனையே
பிரம புரத்தை உகந்தனையே.

வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செய்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டும் உடனே
ஆசறு நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

பூச இனியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச இனியது நீறு பெருந்தவத் தோர்களுக்கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திரு ஆலவாயான் திருநீறே.

## திருவாசகம்

பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உவப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம் புறந் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்தருளுவதினியே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியை
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிரவென் கண்குளிர்ந் தனவே

## திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்காள் மெய்யடியார்கள்
விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி யீசற்காட்
செய்மின் குழாம்புகுந்
தண்டங் கடந்த பொருளள வில்லதோ
ரானந்த வெள்ளப்பொருள்
பண்டு மின்றுமென்று முள்ளபொரு ளென்றே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்


இறவாத இன்ப அன்பு
வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும்; மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும்; இன்னும் வேண்டும்
நான் மகிழ்ந்து பாடி
அறவா; நீ ஆடும் போது
உன் அடியின் கீழ் இருக்க என்றார்


## திருப்புகழ்

இசைந்த ஏறும் கரியுரி போர்வையும் எழில்நீறும்
இலங்கு நூலும் புலியத ளாடையும் மழுமானும்
அசைந்த தோடும் சிரமணி மாலையும் முடிமீதே
அணிந்த ஈசன் பரிவுடன் மேவிய குருநாதா
உசந்த சூரன் கிளையுடன் வேரற முனிவோனே
உகந்த பாசக் கயிறொடு தூதுவர் நலியாதே
அசைந்த போதென் துயர்கெடமாமயில் வரவேணும்
அமைந்த வேலும் புயமிசை மேவிய பெருமாளே.

## திருச்சிற்றம்பலம்.

"தென்னாடுடைய சிவனே போற்றி
என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி"




VAITHILINGAM
+
Luxmipillai
Annapillai
K.V. Markandan + Maruthapiravalli
Rasamma + Sithamparanathapillai
Theivanaipillai + Sivasubramaniam
Subramaniam + Rasamama
Mangaiyarkarasi + Sinnathurai
Balampigai + Vaithilingam
Nadarajah + Muthuachi
Kumarasamy + Selvanayagi
Thiagarajah + Lukkumipillai
Somasuntharam + Rantnavalli
Subramaniam + Thaiyalnayagi
Manikavasagar + Vadivambigai
Maruthapiravalli + Vijayaratnam
Shanmugalingam + Mangala devi
Mangaiyarkasi + Shanmugaratnam
Kandiah + Nageswary
Arunasalam + Thavaranee
Lukkumipillai + Thiagarajah
Shanmugaratnam + Mangagaiyarkarasi
Annaluxmi + Sivasamboo
Vadivelmurugan + Ratneswary
Renukadevi + Panchacharavel
Subathiradevi + Sivanandan
Sarathadevi + Sivanandan
Kirubaharan + Bavani
Diviya Kumaran
Surendran + Bavani
Biranavan
Arujunan + Mythily
Meenakumari
Ratneswary + Vadivelmurugan
Kamaleswary + Ganeshanathan
Suriyakumary + Mageswaran